# ரூ.8000 கூப்பன் திட்டம் ‘திராவிட மாடல் 2.0’ ஆட்சியில் நிறைவேற்றப்படும்!

## “டி.டி. நெக்ஸ்ட்” ஆங்கில நாளேட்டிற்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி...

9-ஆம் பக்கத் தொடர்ச்சி

### அ.தி.மு.க. முதுகில் ஏறி நுழைய பார்க்கும் பா.ஜ.க.!

**செய்தியாளர்:** *நீங்கள் அடிக்கடி “தமிழ்நாடு Vs டெல்லி” என்று கூறுகிறீர்கள். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் இது தமிழ்நாடு தேர்தல் என்கிறார். அதில் டெல்லியை ஏன் கொண்டு வருகிறீர்கள்?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:**தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் டெல்லியின் தலையீடு இல்லை என்றால் எதற்காக கூட்டணி தொகுதிப் பங்கீட்டு பேச்சுவார்த்தை நடத்தக் கூட எடப்பாடி பழனிசாமி ஏன் டெல்லிக்கு ஓடினார்? தமிழ்நாட்டு மக்களின் ஆதரவைப் பெற்று வெல்ல முடியாத பா.ஜ.க., அ.தி.மு.க. முதுகில் ஏறி புறவாசல் வழியாக நுழையப் பார்க்கிறது என்பது வெளிப்படையான உண்மை.

தமிழ்நாட்டின் நிதி உரிமை கல்வி உரிமை மொழி உரிமை பண்பாட்டு உரிமை என அனைத்தின் மீதும் தொடர் தாக்குதலை நிகழ்த்தி கொண்டிருக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசிடம் இருந்து தமிழ்நாட்டைப் பாதுகாக்கும் அரணாக மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி இருக்கிறது. மக்கள் ஆதரவுடன் நிற்கும் எங்களை நேரடியாக வெல்ல முடியாது என தெரிந்து அடிமைகளின் முதுகில் ஏறி வருகின்றனர். அதனால்தான் பிரதமர் மோடியும், அமித்ஷாவும் NDA அரசை அமைப்போம் என தொடர்ந்து கூறி வருகின்றனர். தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் டெல்லிக்கும் அவர்களுக்கு துணை போகும் அ.தி.மு.க.வையும் வீழ்த்த தமிழ்நாடு போராடும். இப்போது தமிழ்நாட்டின் அரசியல் உரிமையையே பறிக்கும் தொகுதி மறு சீரமைப்பு எனக் கூறி நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கே பேராபத்தை பா.ஜ.க. கொண்டு வர, அதற்கு அதி.மு.க. வக்காலத்து வாங்குகிறது. அதனால்தான் இந்த தேர்தல் தமிழ்நாடு அணி Vs டெல்லி அணி என்கிறோம். தமிழ்நாட்டின் நலன் காக்கும் எங்கள் அணிக்கும் அரசியல் உரிமை உள்ளிட்ட அனைத்திலும் தமிழ்நாட்டை நாசம் செய்ய காத்திருக்கும் அவர்கள் அணிக்குமான தேர்தல். இதில் உறுதியாக தமிழ்நாடு வெல்லும்.

### ஊழலின் ஊற்றுக் கண் எடப்பாடி, புனிதர் வேடம் போடுகிறார்!

**செய்தியாளர்:** தேர்தல் பிரச்சாரங்களில் தனிப்பட்ட தாக்குதல்கள் அதிகரித்து வருவதாக நீங்கள் நினைக்கிறீர்களா?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** ஐந்தாண்டுகளாக எதிர்க்கட்சித் தலைவராக நாங்கள் என்ன செய்தோம் என பேசலாம். ஆட்சிக்கு வந்தால் என்ன செய்ய போகிறோம் என சொல்லலாம். ஆனால், அதைக்கூட அவர்களால் சொல்ல முடியவில்லை. எங்கள் ஆட்சி மீது குறை சொல்ல ஏதுமில்லாத விரக்தியில் தோல்வி பயத்தில் தரக்குறைவான தனி நபர் விமர்சனங்களை, அவதூறுகளை பேசி வருகின்றன எதிர்க்கட்சிகள்.

எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் பிரச்சாரத்தில் அருவருக்கத்தக்க வகையில் தொடர்ந்து பேசி வருகிறார். ஊழலின் ஊற்றுக்கண்ணாக ஆட்சி நடத்தியவர் இன்று புனிதர் வேடம் போட்டு பொய் பேசுகிறார். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைப் பற்றி மிக மோசமாகப் பேசினார். அடுத்து என்னை பற்றி சொல்லும் போது “ஸ்டாலின் ஆட்சியில்கொரோனா இருந்திருந்தால் ஸ்டாலினே போய்ச் சேர்ந்திருப்பார்” என்றார். நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி அவர்களைப் பற்றி அருவருக்கத்தக்க வகையில் பேசினார். தொடர்ந்து அப்படிப் பேசுவதையே பழனிசாமி வழக்கமாக வைத்திருக்கிறார். இதையெல்லாம் பார்க்கும்போது தனக்கு என சொல்ல சாதனை இல்லாத காரணத்தால் தி.மு.க. அரசின் சாதனைகளை திசைதிருப்ப திட்டமிட்டேதான் அவர் இப்படி அவதூறு பேசுகிறார் எனத் தெரிகிறது.இதற்கெல்லாம் தமிழ்நாட்டு மக்களே தக்க பாடம் புகட்டுவார்கள்.

### அறநிலையத் துறையில் எண்ணற்ற சாதனைகள்!

**செய்தியாளர்:** *இந்து சமய அறநிலையத் துறை தொடர்பான அறிவிப்புகள், கோவில் குடமுழுக்கு உள்ளிட்டவை தேர்தல் அறிக்கையில் சேர்க்கப்பட்டதற்கு காரணம் என்ன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:**இந்து சமய அறநிலையத்துறை என்ற அரசுத்துறை உள்ளது. அதற்கு தனி அமைச்சர் இருக்கிறார். அந்தத்துறையின் சார்பில் என்ன செய்யப் போகிறோம் என தேர்தல் வாக்குறுதியில் அறிவிப்பதில் தவறில்லையே. அதிலும் குறிப்பாக திராவிட மாடல் அரசின் இந்து சமய அறநிலையத்துறையில் எண்ணற்ற சாதனைகளை செய்திருக்கிறோம். 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தியுள்ளோம். ஆகவே மதச்சார்பின்மையை பேணிக்காக்கும் வகையில் தி.மு.க. தேர்தல் அறிக்கையில் இந்து, இசுலாமிய, கிறிஸ்துவம் என அனைத்து சமயங்களுக்கான வாக்குறுதிகளுமே இடம்பெற்றுள்ளன.

### மோடி அரசின் கடன் உயர்வை பற்றி எடப்பாடி பேசுவாரா?

**செய்தியாளர்:** *எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே. பழனிசாமி ஐந்து ஆண்டுகளில் ரூ. 5 லட்சம் கோடி கடன் எடுத்ததாக குற்றம்சாட்டுகிறார். அதற்கு உங்கள் பதில் என்ன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:**தமிழ்நாட்டு அரசின் நிதி நிலையை அதலபாதாளத்தில் தள்ளி விட்டுப் போன அவருக்கு நிதி மேலாண்மை பற்றிப் பேச தகுதி இல்லை. திராவிட மாடல் அரசில்தான் பொருளாதார ஆய்வுக்குழு அமைத்து நிதி மேலாண்மையை சீராக்கியுள்ளோம். ஒன்றிய பா.ஜ.க. அரசின் பாரபட்ச GST நிதி பங்கீடு, கல்வி நிதி , குடிநீர் திட்ட நிதி, நூறு நாள் வேலை திட்ட நிதி என எந்த ஒரு நிதியையும் முறையாக விடுவிக்கவில்லை. கனமழை, புயலால் தமிழ்நாட்டு மக்கள் பாதிக்கபட்ட போது கூட நிவாரண நிதி அளிக்கவில்லை. ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கென எந்த வளர்ச்சி திட்டங்களும் அறிவிக்கவில்லை. தமிழ்நாட்டின் மீது பொருளாதார தாக்குதலை ஒன்றிய பா.ஜ.க. அரசு மறைமுகமாக நடத்தி வருகிறது. அதற்காக தமிழ்நாட்டு மக்கள் பாதிக்கப்பட வேண்டுமா?

ஒன்றிய பா.ஜ.க. அரசு நிதி நெருக்கடிகள் கொடுத்தாலும் தமிழ்நாட்டின் தொழில் வளத்தை பெருக்கி தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 30 லட்சம் கோடியாக உயர்த்தி உள்ளோம். கடந்த ஐந்தாண்டு கால தி.மு.க. ஆட்சியில் (2021-26) தமிழ்நாட்டின் கடன் அளவு 96% மட்டுமே அதிகரித்துள்ளது. ஆனால் அதேசமயம், அ.தி.மு.க. ஆட்சியில் (2016-21) இது 128% ஆக அதிரித்திருந்தது.

மேலும், நமது மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியுடன் (GSDP) ஒப்பிடும் போது கடன் விகிதம் 26.43% மட்டுமே உள்ளது. இது அனுமதிக்கப்பட்ட 28.7%க்குள்தான் இருக்கிறது. கடந்த அதி.மு.க. ஆட்சியில் வாங்கப்பட்ட கடனவை விட குறைந்த விகிதத்தில்தான் கடன் வாங்கப்பட்டுள்ளது. பழனிசாமி ஆட்சியில் எந்த நலத் திட்டங்களும் வழங்காமலேயே கடன் அளவு கடுமையாக அதிகரித்தது. ஆனால் எங்களது ஆட்சியில் மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம், புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன், நான் முதல்வன் உள்ளிட்ட நலத்திட்டங்களும் அடிப்படை கட்டமைப்புகளும் செயல்படுத்தி வருகின்ற போதும் கடன் அளவை கட்டுக்குள் வைத்துள்ளோம்.

### 220 சதவீதம் அதிகரித்த இந்தியாவின் மொத்தக் கடன்!

எங்களை பார்த்து கேள்வி எழுப்பும் பழனிசாமி மோடி அரசின் கடன் உயர்வை பற்றி கேட்பாரா? மோடி அரசு கடனே வாங்காமல்தான் இந்தியாவை ஆட்சி செய்து கொண்டிருக்கிறதா? பா.ஜ.க. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு பிரதமர் மன்மோகன் சிங் ஆட்சியில் 2014 மார்ச் நிலவரப்படி இந்தியாவின் மொத்தக் கடன் சுமார் 55.87 லட்சம் கோடி ரூபாய். தற்போது மோடி ஆட்சியில் கடன் எவ்வளவு தெரியுமா? 2026 பிப்ரவரியில் 180 லட்சம் கோடி ரூபாயை கடன் தாண்டிவிட்டது. மோடியின் கடந்த 12 ஆண்டு கால ஆட்சியில் இந்தியாவின் மொத்தக் கடன் சுமார் 220% அதிகரித்து விட்டது. மோடி ஆட்சியில் இந்த வரலாறு காணாத கடன், பழனிசாமியின் கண்ணுக்குத் தெரியவில்லையா?

### பொருளாதார வளர்ச்சியில் நம்பர் 1 மாநிலம் தமிழ்நாடு!

**செய்தியாளர்:** *புதிய திட்டங்கள் கடன் சுமையை அதிகரிக்குமா? கடன் அதிகரிக்காமல் திட்டங்களை செயல்படுத்த அரசுக்கு திட்டமிடல் உள்ளதா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:**வீழ்ச்சியில் இருந்த தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மீட்டு 11.19% என்ற இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சி விகிதத்துடன் இன்று இந்தியாவிலேயே No 1 மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்தி உள்ளோம். அடுத்த ஐந்தாண்டில் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் டாலர் அளவு உயர்த்த இலக்கு நிர்ணயித்து அதற்கான திட்டங்களை வகுத்து செயலாற்றி வருகிறோம். ஆகவே மக்களுக்கான நலத்திட்டங்களை வழங்குவதற்கு எந்த வித பொருளாதார தடைகளும் இருக்காது.

கடன் வாங்காமல் உலகில் குடும்பங்களோ, நிறுவனங்களோ, அரசுகளோ நடப்பதில்லை. இந்தியாவில் மாநில அரசுகள் கடன் வாங்குவதற்கான உச்ச வரம்புகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. அந்தந்த மாநிலத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (GSDP) மதிப்பைப் பொறுத்துத்தான் மாநிலங்கள் கடன் வாங்க முடியும். அந்த சீலிங் லிமிட்டை தமிழ்நாடு அரசு தாண்டவில்லை. விதிகளை மீறி கடன் பெறவில்லை. ஒன்றிய அரசு எப்படிக் கடனை வாங்குகிறதோ அதே அளவுகோலைத்தான் தமிழ்நாடு அரசும் பின்பற்று கிறது. எங்கள் திட்டங்கள் எல்லாமே முறையான நிதி ஆலோசனைக்குப் பிறகே அறிவிக்கப்படுகின்றன. செயல்படுத்தப்படு கின்றன!

**செய்தியாளர்:** *பிற கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கு, குறிப்பாக அ.தி.மு.க.விலிருந்து வந்தவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இது அந்தத் தொகுதிகளில் தி.மு.க. உறுப்பினர்களின் மன உறுதியை பாதிக்காதா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** கழகத் தொண்டர்களின் மன நிலை எனக்குத் தெரியும். எனது தேர்தல் யுக்தி எனது அன்பு உடன் பிறப்புகளுக்குத் தெரியும். ஆகவேதான் கழகத் தொண்டர்கள் அனைவரும் தேர்தல் களத்தில் பம்பரமாக சுழன்று பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

### குற்றங்களைத் தடுப்பதில் விரைந்து நடவடிக்கை!

**செய்தியாளர்:** *அ.தி.மு.க. மட்டுமல்லாமல் அனைத்து எதிர்க்கட்சிகளும் சட்டம் ஒழுங்கு குறித்து குற்றம் சாட்டுகின்றன. மது மற்றும் கஞ்சா போன்ற போதைப்பொருட்கள் கட்டுப்படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகளும் உள்ளன. உங்கள் பதில் என்ன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:**கடந்த அதி.மு.க. ஆட்சியை விட எங்களது ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக உள்ளது. குற்றங்களைத் தடுப்பதிலும் சரி குற்றவாளிகளுக்கு விரைந்து தண்டனை பெற்றுத்தருவதிலும் சரி முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. சட்டம் ஒழுங்கு பற்றி குறை கூறுவதெல்லாம் வெற்று அவதூறுகள். குட்கா மாமூல் வசூல் செய்து தமிழ்நாட்டில் மூலை முடுக்கெல்லாம் குட்காவை நடமாட விட்டுப் போனது எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அதி.மு.க.தான்! கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் அமைச்சரே போதைப்பொருள் விற்பனைக்கு லஞ்சம் வாங்கியது தொடர்பான வழக்குகள் CBI விசாரணையில் உள்ளது.

பிரதமர் மோடியின் குஜராத் மாநிலம் தான் போதை பொருள் குடோனாக இருந்து வருகிறது என்பது புள்ளி விவரங்களை புரட்டிப் பார்த்தாலே தெரியும். ஆனால் நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடன் போதைப் பொருள் ஒழிப்பில் தனிக் கவனம் செலுத்தி கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சொத்துக்கள் பறிமுதல், வங்கி கணக்கு முடக்கம் என தி.மு.க. அரசு போல் போதைப் பொருட்களுக்கு எதிராக அ.தி.மு.க. ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அது போன்ற வழக்குகளில் தி.மு.க. ஆட்சி போல் அதி.மு.க. ஆட்சியில் விரைந்து தண்டனை வாங்கிக் கொடுக்கப்பட வில்லை. ஆகவே அதி.மு.க. பா.ஜ.க. வினருக்கு தமிழ்நாட்டை பற்றி பேச எந்த தகுதியும் இல்லை.

### ‘நீட்’: எங்கள் போராட்டம் எல்லா வகையிலும் தொடரும்!

**செய்தியாளர்:** *கல்வியை மாநில பட்டியலில் மீண்டும் கொண்டு வரவும், NEET தேர்விலிருந்து விலக்கு பெறவும் தீர்வு எப்போது கிடைக்கும்?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:**தமிழகத்தில் நீட் தேர்வை ரத்து செய்து, 12ஆம் வகுப்பு மதிப்பெண்கள் அடிப்படையில் மருத்துவ மாணவர் சேர்க்கை நடத்த வேண்டும் என்பதில் தி.மு.க. அரசு உறுதியாக உள்ளது. நீட் தேர்வால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்ய, ஓய்வு பெற்ற நீதிபதி ஏ.கே. ராஜன் தலைமையில் குழுவை அமைத்தோம். அதன் பரிந்துரையின் அடிப்படையில் சட்டப் போராட்டங்களை முன்னெடுத்தோம். நீட் தேர்வில் இருந்து விலக்கு கோரும் மசோதா சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு நீண்ட போராட்டத்திற்கு பிறகு குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தோம். நீட் தேர்வு கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது. மாநிலங்களின் கல்வி உரிமையைப் பறிக்கிறது என்றும் கூறி, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறோம். நீட் தேர்வுக்கு எதிராக 50 லட்சம் கையெழுத்துகளைப் பெற்று குடியரசுத் தலைவருக்கு அனுப்பினோம். நீட் தேர்வில் நடக்கும் முறைகேடுகளைக் கண்டித்து போராட்டங்கள் நடத்தப்பட்டன.நீட் விலக்கு தொடர்பாகத் தொடர்ந்து அனைத்துக் கட்சிக் கூட்டங்களை நடத்தி, சட்டப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தினோம். பிரதமரைச் சந்திக்கும் போதெல்லாம் நீட் விலக்கு மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று அழுத்தம் கொடுத்து வருகிறோம். தி.மு.க. அரசு ஆட்சியிலிருந்து நீட் தேர்வை ரத்து செய்ய என்ன முன்முயற்சிகள் எடுக்க வேண்டுமோ அதையெல்லாம் எடுத்துள்ளோம். இவையெல்லாம் ஒரு பக்கம் செய்து கொண்டிருந்தாலும் மோடி அரசு தமிழ் மாணவர்களை வஞ்சிக்கிறது. அதற்கு அ.தி.மு.க.வும் துணை போகிறது. தி.மு.க. அங்கம் வகிக்கும் இந்தியா கூட்டணியின் அரசு ஒன்றியத்தில் அமைந்தவுடன் தீர்வு கிடைக்கும். அதுவரை எங்கள் போராட்டம் எல்லா வகையிலும் தொடரும்.

**செய்தியாளர்:** *கடந்த ஐந்து ஆண்டுகளில் தி.மு.க. அரசு சந்தித்த முக்கிய சவால்கள் என்ன? மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால் எதிர்கால சவால்கள் என்ன என்று நினைக்கிறீர்கள்?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** 2021ஆம் ஆண்டுக்கு முந்தைய 10 ஆண்டு கால அதி.மு.க. ஆட்சியால் செயலிழந்த தமிழ்நாட்டை மீண்டும் வளர்ச்சியை நோக்கி பயணிக்க செய்வதுதான் பெரும் சவாலாக இருந்தது. அதுவும் கொரோனா இரண்டாம் அலையின் தாக்கம் வேறு உச்சத்தில் இருந்தது, ஒன்றிய அரசின் ஓரவஞ்சனை வேறு தொடர்ந்தது. ஆனால், அனைத்தையும் சமாளித்து இன்று தமிழ்நாட்டின் வளர்ச்சியை நான்கு கால் பாய்ச்சலில் பயணிக்க வைத்து விட்டோம். இனிவரும் காலங்களில் தமிழ்நாட்டின் வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு எடுத்து செல்வது, உட்கட்மைப்பு, கல்வி, மருத்துவம் ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிப்பது, AIதொழில்நுட்பத்திற்கு ஏற்றபடி இளைஞர்களின் திறனை வளர்த்து தயார்படுத்துவது, தமிழ் நாட்டின் மொழி, பண்பாடு, பொருளாதாரம் மீதான டெல்லியின் படையெடுப்பை தொடர்ந்து எதிர்த்து நமது உரிமையை நிலைநாட்டுவது இவற்றை முன் நிறுத்தி ஆட்சி அமையும்.

**செய்தியாளர்:** *தேர்தலில் பல முனைப் போட்டி நிலவி வருகிறது. இது தி.மு.க. கூட்டணிக்கு சாதகமா அல்லது பாதகமா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:**எத்தனை முனை போட்டியாக இருந்தாலும் மீண்டும் வெல்வது தி.மு.க. கூட்டணிதான். களம் தி.மு.க.விற்கு சாதகமாகவே இருக்கிறது. திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைவதை நீங்களும் பார்க்கத்தான் போகிறீர்கள்.

**செய்தியாளர்:** *மீண்டும் ஆட்சிக்கு வரும் என்ற நம்பிக்கையில் தி.மு.க. உள்ளது. திராவிட மாடல் 2.0ல் முன்னுரிமை பெறும் துறைகள் எவை?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** கல்வி, மருத்துவம், தொழில் வளம், சமூக மேம்பாடு ஆகியவற்றிற்கு கூடுதல் முக்கியத்துவம் அளித்து செயலாற்றுவோம்.

**செய்தியாளர்:** *கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசில் இருந்தபோது நீங்கள் மேம்படுத்த வேண்டியது எது என நினைக்கிறீர்கள்?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** திராவிட மாடல் அரசின் ஐந்தாண்டு காலம் சாதனைகள் நிரம்பியது. நல்லாட்சிக்கு இலக்கணமாக வெளிப்படையான நிர்வாகத்தை அளித்து மக்களின் மனதில் இடம்பிடித்துள்ளோம் என்பதே எனது பதில்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

> **திராவிட மாடல் 2.0அரசிற்கான தேர்தல் அறிக்கையை வெளியிட்டதுமுதல் ஊர் முழுக்க எங்களின் தேர்தல் அறிக்கை பற்றிய பேச்சுகள்தான் ஒலிக்கிறது. அந்த அளவு மூலை முடுக்கெல்லாம் தி.மு.க. தேர்தல் அறிக்கை வாக்குறுதிகள் சென்று சேர்ந்துள்ளன. குறிப்பாக இல்லத்தரசிகள் தங்களுக்கு தேவையான வீட்டு உபயோகப் பொருட்களை பிடித்த கடைகளில் பிடித்த பிராண்டில் தாங்களே தேர்ந்தெடுத்து வாங்கிக்கொள்ளும் வகையில் அறிவிக்கபட்டுள்ள ரூ.8000 இல்லத்தரசி கூப்பன் இன்று எல்லா வீடுகளிலும் பேசுபொருளாகி இருக்கிறது. பெண்களின் வீட்டு வேலைகளின் சுமையை குறைக்கும் நோக்கோடு இந்தத் திட்டத்தை அறிவித்துள்ளோம். பெண்கள் மட்டுமல்லாது அனைத்து தரப்பினரும் இத்திட்டத்தை வரவேற்று உள்ளனர். திராவிட மாடல் 2.O ஆட்சி அமைந்தவுடன் திட்டம் நிச்சயம் நிறைவேற்றப்படும்.**


சட்டப்பேரவை பொதுத்தேர்தல் — 2026

## தலைமைக் கழக “வார்ரூம்”

### தலைமைக் கழக அறிவிப்பு

எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலை திறம்பட கையாளவும், கழக நிர்வாகிகளுக்கு ஏற்படும் சந்தேகங்கள் மற்றும் களத்தில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் சென்னை அண்ணா அறிவாலயத்தில் கட்டுப்பாட்டு அறை (War Room) அமைக்கப்பட்டுள்ளது. தேர்தல் தொடர்பான சந்தேகங்களை கேட்கவும், புகார்கள்- கருத்துகளைத் தெரிவிக்கவும். பின்வரும் தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**வார்ரூம் எண் : 08069446900**

“அண்ணா அறிவாலயம்”
சென்னை-18.
நாள் : 19-04-2026.

தலைமைக் கழகம்,
தி.மு.க.




பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் டாக்டர்.டி. என்.வி.எஸ்.செந்தில்குமார் தும்பலஹள்ளி டேம், கொண்டிகானஹள்ளி, ஆர்.எஸ்.வி. முருக்கம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களைச் சந்தித்து, திராவிட மாடல் அரசின் சாதனைகள் மற்றும் செயல்படுத்திய திட்டங்களை எடுத்துரைத்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.உடன் முன்னாள் ஒன்றிய செயலாளர் இல. கிருஷ்ணன், மற்றும் கூட்டணி கட்சியினர் பங்கேற்றனர்.